# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


**********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

*******

முறையீட்டு மனு எண்.230/2018/பே

ஆணை நாள்: 07–03–2020.

திரு. சுனில் ஜெயராம்,
எண்.7, 2–வது பிரதான சாலை,
எஸ்.பி.ஐ. காலனி,
சிட்லபாக்கம்,
சென்னை – 64. — முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
சிட்லபாக்கம் பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம். — எதிர் மனுதாரர்.

## ஆணை.

காஞ்சிபுரம் மாவட்டம், சிட்லபாக்கம் பேரூராட்சி, எஸ்.பி.ஐ. காலனி, கதவு எண்.7, 2–வது பிரதான சாலையில் வசிக்கும் திரு.சுனில் ஜெயராம் என்பவரது 13.11.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 14.11.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 230/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு இறுதியாக ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், காஞ்சிபுரம் மாவட்டம், சிட்லபாக்கம் பேரூராட்சியில் மழை மற்றும் வெள்ளத் தடுப்பு தொடர்பாக பேரூராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்ட மூடிய கால்வாய் மழை நீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை, இப்பணி வழித்தடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றாமலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், இது தொடர்பாக பணியின் மதிப்பீடு மற்றும் பணிக்கான ஆணை, பணி கட்டுமானம், மழை நீர் கால்வாய் செல்லும் வழி தொடர்பான விவரங்களை சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரியமைக்கு பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி தகவல்களை தராமல், பல்வேறு காரணங்களை சொல்லி தட்டிக் கழித்ததாகவும், தாங்கள் செயல் அலுவலரை மிரட்டுவதாகவும், கலவரத்தை ஏற்படுத்துவதாகவும் புகார் புனைந்து தங்கள் மீது காவல் துறையில் அளிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளதுடன், பணியமர்த்தல் ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக தாங்கள் ஆய்வு செய்ததில், பணி ஒப்பந்தம் வழங்குவதில் [illegible] இடைவெளி கண்டறியப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி பேரூராட்சியில் ரூ.5.00 கோடி மதிப்பிலான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் மேற்கொள்ளப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி பெறுதல், பணி ஆணை வழங்குதல் போன்ற நிகழ்வுகளில் பல்வேறு குளறுபடிகள் உள்ளதாகவும் தெரிவித்து விசாரணை கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

20.11.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையின்படி பெறப்பட்ட 05.12.2018 நாளிட்ட சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில், காஞ்சிபுரம் மாவட்டம் சிட்லபாக்கம் பேரூராட்சி பகுதியில் கடந்த 2015 மற்றும் 2017–ஆம் ஆண்டு பெய்த கனமழையினால் பாதிப்புக்குள்ளான சேதுநாராயணன் தெரு, பாரதியார் தெரு, சொக்கநாதர் தெரு, வைத்தியலிங்கம் தெரு, முத்து ஆதி தெரு, செல்வகுமார் தெரு, ஆபிரகாம் லிங்கன் தெரு, கல்யாணசுந்தரம் தெரு, திருமகள் நகர், நேதாஜி தெரு மற்றும் காந்தி அவென்யூ ஆகிய பகுதிகளை 24.07.2018 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நேரடி ஆய்வு செய்து தெரிவிக்கப்பட்ட கருத்தின்படி, வெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்கும் பொருட்டு பொதுப்பணித்துறையினரால் செம்பாக்கம் ஏரியிலிருந்து பாம்பன் சுவாமிகள் சாலை வரை 890 மீட்டர் நீளத்திற்கு மேல் மூடியுடன் கூடிய மழை நீர் வடிகால் அமைக்கப்பட இருந்ததாகவும், அதன் தொடர்ச்சியாக சிட்லபாக்கம் பேரூராட்சியின் மூலம் பாம்பன் சுவாமிகள் சாலை முதல் சேதுநாராயணன் தெரு வரை 690 மீட்டர் நீளத்திற்கு புதியதாக மேல் மூடியுடன் கூடிய மழை நீர் வடிகால் அமைக்க ரூ.500.00 லட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதாகவும் மேற்படி மதிப்பீடுகளுக்கு சிட்லபாக்கம் பேரூராட்சி மன்ற தீர்மான எண் 313/25.07.2018 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டு, மேற்படி பணியை மேற்கொள்ள போதிய நிதி பேரூராட்சியில் இல்லாததால், அரசு மானியம் பெற்று பணிகள் மேற்கொள்ள காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது கடித எண். 1306/2018/பேரூ.1/நாள். 03.08.2018ன்படி பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பிரேரணைகள் அனுப்பி வைக்கப்பட்டு, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் செயல் முறைகள் ந.க.எண். 6196–1/2018/த.4, நாள் 28.09.2018ன்படி மூலதன மானிய நிதி (CGF) 2018–19ன் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதாகவும், மேற்படி பணிகளுக்கு பேரூராட்சிகளின் இயக்குநரக கண்காணிப்பு பொறியாளரின் நடவடிக்கைகள் ந.க.எண். 6196/2018/த–4/நாள் 03.10.2018ல் தொழில் நுட்ப அங்கீகாரம் பெறப்பட்டு, பேரூராட்சிகளின் இயக்குநரின் நிர்வாக அனுமதி நிபந்தனைகளின்படி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் 03.10.2018 நாளிட்ட அறிக்கையின்படி, சிட்லபாக்கம் பேரூராட்சி ந.க.எண். 302/2018 நாள்.04.10.2018ன்படி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை வெளியிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை மாநில ஒப்பந்தப்புள்ளி பனர் மற்றும் இணையதளம் மூலமாகவும் 17.10.2018 அன்று விளம்பரம் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதாகவும், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.எ.சுந்தரராஜன் என்பவருக்கு மேற்படி பணிகளுக்கான பணி ஆணை சிட்லபாக்கம் பேரூராட்சி ந.க.எண். 302/2018 நாள்.22.10.2018ல் வழங்கப்பட்டு, அதன் பின்னர் பணிகள் துவங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையில் பொது நிதியின் மூலமாக சிட்லபாக்கம் பேரூராட்சியில் வெள்ளத்தடுப்பு நடவடிக்கை பணியாக, [illegible] தெருவில் ரூ.20.00 லட்சம் மதிப்பீட்டில் மழை நீர் வடிகால் பணி 31.08.2018–ஆம் தேதியில் பணி உத்திரவு வழங்கப்பட்டு திரு.எ.சுந்தரராஜன் ஒப்பந்தக்காரர் மூலம் பணி நடைபெற்று வந்ததாகவும், இப்பணி நடைபெறும்போதுதான் சிட்லபாக்கம் ரைசிங் குழுவினர் 20.10.2018 அன்று பணி சமயத்தில் பணி செய்யக்கூடாது என தகராறு செய்ததாகவும், இதன் பொருட்டு காவல் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள பணிகளும் முன்னதாக பணி நடைபெற்றதாக கூறப்படும் பணியும் வேறு வேறு என்பதால் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள புகார் உண்மைக்கு மாறானது என சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

19.12.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி 31.01.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் சிட்லபாக்கம் ரைசிங் தன்னார்வலர் அமைப்பின் குழு அங்கு இருக்கும் ஏரியினை ஆக்கிரமிப்பில் இருந்து காப்பாற்றவும், கழிவு நீர் மற்றும் குப்பை அகற்றவும் கடந்த 5வருடங்களாக முயற்சி செய்து வருவதாகவும், ஏரியினை சரி செய்ய தாமதம் ஆவது பணப்பற்றாக்குறையினால் என்பது அரசின் வாதம் என்வும், கடந்த அக்டோபர் மாதம் ரூ.5.20 கோடிக்கு மழை நீர் கால்வாய் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டதாகவும், மேற்படி ஏரியினை தூர் வாரி, செப்பனிட்டாலே வெள்ள அபாயமும், வறட்சியும் ஏற்படாது எனவும் தெரிவித்துள்ளார். மேற்படி கால்வாய் கட்டும் பணியின் விவரங்களை கேட்டபோது, தங்கள் சங்கத்தின் தன்னார்வலர்கள் மீது பொய்யான புகார் அளித்து, நான்கு

நாள்களில் இருமுறை கைது செய்ய வைத்ததாகவும், மேற்படி பணி தொடர்பான டெண்டர் விவரங்களை ஆராய்ந்து பார்த்தபோது, அதில் பல முறைகேடுகள் நடந்திருப்பதாகவும், டெண்டர் தேதி இறுதி செய்யும் நாளுக்கு முன்னரே ஒப்பந்தக்காரரை முடிவு செய்து விட்டு, பணியினையும் ஆரம்பித்து விட்டதாகவும், இரு உறைகள் திட்ட ஒப்பந்தப்புள்ளி திட்டத்தில் ஒப்பந்தக்காரரை முடிவு செய்து பணியினை துவங்க குறைந்த பட்சம் 6 முதல் 8 வாரங்கள் ஆகும் எனவும், ஆனால் மேற்படி ரூ.5.20 கோடிக்கான ஒப்பந்தப்பணியினை திட்டத் தேதிக்கு 10 அல்லது 15 நாட்களுக்கு முன்னரே ஆரம்பித்து விட்டதாகவும், இதன் மூலம் ஊழல் நடைபெற்றிருப்பது தெரியவந்துள்ளதாகவும், இதைத் தவிர இந்த கட்டுமான பணி, திட்டம் மற்றும் அதில் கண்டுள்ள குறிப்புகளின்படி நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும், மொத்தப் பணியும் தரமற்ற முறையில் செய்யப்பட்டு அதிலும் ஊழல் நடைபெற்றுள்ளதாகவும், இதற்கு காரணமான சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. வெங்கடேசன், இளநிலை பொறியாளர் திரு.கோவிந்தராஜ் மற்றும் இதில் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளையும் விசாரித்து, மக்கள் வரிப்பணத்தை மீட்டுத் தந்து, இந்த பணியினை தரமுடன் செய்து முடிக்க வேண்டுமென தனது கோரிக்கையினை மனுதாரர் தனது எழுத்துரையில் தெரிவித்துள்ளார்.

19.12.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி 31.01.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில், சிட்லபாக்கம் பகுதியில் கடந்த 2017–ஆம் ஆண்டு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பாதிப்பை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் உயர் அலுவலர்கள் நேரடியாக வெள்ள பாதிப்பு பகுதிகளை பார்வையிட்டதாகவும், அதனைத் தொடர்ந்து வெள்ளப்பெருக்கு ஏற்படாத வண்ணம் துரித நடவடிக்கை மேற்கொள்ள உத்திரவிடப்பட்டதைத் தொடர்ந்து, 2018–ஆம் ஆண்டு வெள்ளப்பெருக்கு பாதிப்பினை தடுக்கும் விதத்தில் 24.07.2018 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரால் நேரடி ஆய்வு செய்து வெள்ள பாதிப்பு ஏற்படாத வண்ணம் நடவடிக்கை எடுக்க உத்திரவிடப்பட்டதைத் தொடர்ந்து, மழை நீர் கால்வாய் அமைக்கும் பணியினை மொத்தம் ரூ.500.00 லட்சம் மதிப்பீட்டில் மூலதன மான்யத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள உரிய கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, ஒதுக்கீடு பெறப்பட்டதாக தெரிவித்துள்ளார். இந்நடைமுறையின் விதிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பேரூராட்சி பொறியாளருடன், பிற பேரூராட்சி பொறியாளர்களை கூடுதலாக நேரடி கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதாகவும், இதில் எந்தவிதமான விதி மீறல்களும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மேற்படி பணிகளுக்கு டெண்டர் முறையாக கோரப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டதாகவும், இதற்கு முன்னர் சிட்லபாக்கம் பேரூராட்சி, ராமகிருஷ்ணா தெருவில் ரூ.20.00 லட்சம் மதிப்பீட்டில் பேரூராட்சி பொது நிதியிலிருந்து மழை நீர் வடிகால் அமைக்கும் பணிக்கு டெண்டர் விடப்பட்டு 31.08.2018 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வந்துள்ளது. இந்நிலையில் மழை வெள்ள பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடப்பட்டதைத் தொடர்ந்து, வெள்ள பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்திரவின்படி மழை நீர் வடிய, மண் கால்வாய் எடுக்கப்பட்டதாகவும், அதனை தவறுதலாக புரிந்து கொண்டு பணி முன்னதாகவே நடைபெறுகிறது என நினைத்து பணி செய்யவிடாமல் முறையீட்டு மனுதாரர் தடுத்து நிறுத்தியதைத் தொடர்ந்து, காவல் துறைக்கு புகார் அளிக்கப்பட்டதாகவும், சிட்லபாக்கம் ஏரியில் சுமார் 25 ஆண்டுகளாகக் கொட்டப்பட்டு வந்த குப்பைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்திரவின்படி வெங்கடமங்கலம் குப்பை கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுவதாகவும், இப்பணியும் முடியும் தருவாயில் உள்ளதாகவும் சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

30.04.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரரின் 13.11.2018 நாளிட்ட முறையீட்டு மனு தொடர்பாக, இம்முறைமன்ற நடுவத்தில் 31.01.2019 அன்று அளித்த வாக்குமூலம் மற்றும் வாக்குமூலத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட கூடுதல் ஆவணங்களில் தெரிவித்துள்ள குறைபாடுகள் தொடர்பாக மேற்படி சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் கருத்து ஆகியவற்றின் மீது உரியவாறு ஆய்வு மேற்கொண்டும், பேரூராட்சி அலுவலக ஆவணங்களை சரிபார்த்தும் விரிவான விளக்க அறிக்கையினை உரிய குறிப்புகளுடன் சமர்ப்பிக்க 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்

முறையீட்டு நடுவர் சட்டம், பிரிவு 6(4) (a) ன் கீழ் காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு ஆணையிடப்பட்டது.

காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது 12.06.2019 நாளிட்ட கடிதத்தில் மேற்படி முறையீடு தொடர்பாக 04.06.2019 அன்று சிட்லபாக்கம் பேரூராட்சியில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும், இப்பகுதியில் கடந்த 2015 மற்றும் 2017-ஆம் ஆண்டுகளில் பெய்த கனமழையின் காரணமாக சிட்லபாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட சேதுநாராயணன் தெரு, பாரதியார் தெரு, லோகநாதன் தெரு, வைத்தியலிங்கம் தெரு, முருகேசன் ஆதி தெரு, வெங்கடசாமி தெரு, ஆர்.வி. நகர் தெரு, கல்யாணசுந்தரம் தெரு, திருமகள் நகர், ஜி.டி. நாயுடு தெரு, காந்தி அவென்யூ மற்றும் வைத்தியலிங்கம் தெரு ஆகிய தெருக்கள் வெள்ளத்தினால் பெரும் பாதிப்புக்குள்ளாயிருந்ததாகவும், இதனைத் தடுக்கும் பொருட்டு பொதுப்பணித்துறையின் மூலம் மேற்படி பாதிக்கப்பட்ட பகுதிகளான செம்பாக்கம் ஏரியிலிருந்து பாம்பன் சுவாமிகள் தெரு வரை 890 மீட்டர் நீளம் மழை நீர் வடிகால் அமைக்கப்பட்டதாகவும், இதன் தொடர்ச்சியாக பாம்பன் சுவாமிகள் தெரு முதல் சேதுநாராயணன் தெரு வரை பேரூராட்சியின் மூலம் 690 மீட்டர் நீளம் முழுமையாக மேல் மூடியுடன் கூடிய மழை நீர் வடிகால் அமைக்க காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேரடி ஆய்வின் அறிவுரைகள் வழங்கப்பட்டதாகவும், அதன்பேரில் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவ மழையின்போது பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் 5 எண்ணிக்கையிலான மேல் மூடியுடன் கூடிய மழை நீர் வடிகால் அமைக்க பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்கள் தனது செயல்முறை ந.க.எண். 6196-1/2018/உ.4/நாள். 28.09.2018 நாளிட்ட ஆணையின்படி ரூ.500.00 லட்சம் மதிப்பீட்டில் சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் 05.12.2018 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள 5 எண்ணிக்கையிலான பணிகளை மேற்கொள்ள 2018-19 ஆம் ஆண்டு மூலதன மானிய நிதியின் கீழ் ரூ.390.00 லட்சம் ஒதுக்கீடு செய்து மீதமுள்ள ரூ.110.00 லட்சம் பேரூராட்சி பொது நிதியில் இருந்து பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெற்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

மேற்படி நிர்வாக அனுமதியினைத் தொடர்ந்து மேற்படி பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு பேரூராட்சிகளின் இயக்குநரக கண்காணிப்புப் பொறியாளரின் ந.க.எண்:6196/2018/உ.4/ நாள். 03.10.2018ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் கடித ந.க.எண்.1306/2018/பேரு.1/நாள்.03.10.2018ன்படி வெள்ளத் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் பொருட்டு பருவ மழை தொடங்க ஒரு மாத காலம் அவகாசம் மட்டுமே இருந்ததாலும், 07.10.2018 அன்று பெரு வெள்ளம் வரும் என சிகப்பு எச்சரிக்கை (Red Alert) அறிவிக்கப்பட்டதாலும், பொதுமக்களின் நலன் கருதியும் பணியின் அவசர அவசியம் கருதியும் மேற்படி வடிகால் பணிகளை 7 நாட்கள் கொண்ட குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.302/2018 நாள். 04.10.2018ன்படி மேற்படி பணிகளுக்கான இரு உறை ஒப்பந்தப்புள்ளி 17.10.2018ல் கோரப்பட்டதாகவும், இது தொடர்பான அறிவிப்பு www.tender.tn.gov.in, www.tntenders.gov.in ஆகிய இணையதளங்களில் விளம்பரம் மேற்கொண்டதாகவும், ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அலுவலக விளம்பரப் பலகையிலும் அறிவிப்பு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தலைமைச் செயலக மக்கள் செய்தி தொடர்பு இயக்குநரகம் மூலம் 10.10.2018 நாளிட்ட TRINITY MIRROR ஆங்கில நாளிதழ் மற்றும் மக்கள் குரல் நாளிதழிலும் விளம்பரம் வெளியிடப்பட்டதாகவும், இவைகளைத் தொடர்ந்து 17.10.2018 அன்று பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்த ஒப்பு நோக்குக் குழுவினரால் 17.10.2018 அன்று தொழில் நுட்ப தகுதி பரிசீலனை செய்யப்பட்டு, தொழில் நுட்ப தகுதி பெறாத ஒப்பந்தக்காரரான M/s. J.S & Sons, 17, Mothilal Street, T.Nagar, Chennai-17 என்ற ஒப்பந்தக்காரர் (i) 15 சதவீதம் வங்கி இருப்பு இருப்பதற்கான

ஆதாரம் சமர்ப்பிக்காததாலும், (2) Annexure- A,B,C,D,E, ஆகியவை சரியாக பூர்த்தி செய்யப்படாததாலும் நிராகரிப்பு செய்யப்பட்டதாகவும், மேற்படி பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.எ. சுந்தரராஜன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பு நோக்குக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு பணி ஆணை 22.10.2018ல் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பணிகள் திட்டமிடப்பட்ட கால கட்டத்தில் கால்வாய் அமைக்கும் போது தங்களது வீடுகள் பாதிக்கப்படும் என்பது குறித்து பொதுமக்கள் அளித்த தெரிவித்ததைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆகியோர்களால் நேரடி கள ஆய்வு மேற்கொண்டு பொதுமக்கள் அச்சத்தினை தவிர்க்க, சிட்லபாக்கம் பேரூராட்சி பொது நிதியில் முன்னதாக ரூ.20.00 லட்சம் மதிப்பீட்டில் ராமர் தெருவில் மேல்மூடியுடன் கூடிய மழை நீர் வடிகால் அமைக்கவும், மழைக் காலங்களில் விவேகானந்தா வேதிக்லைன் பள்ளி மதில் சுவரினை ஒட்டி மழை நீர் தேங்குவதை, ஒவ்வொரு வருடமும் பள்ளியின் மதில் சுவரினை இடித்து மழை நீரை அப்புறப்படுத்தி வந்ததை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் பார்வையிட்டு, இதற்கு நிரந்தர தீர்வாக மேல் மூடியுடன் கூடிய மழை நீர் வடிகால் அமைக்க அறிவுறுத்தியதைத் தொடர்ந்து ஆஞ்சநேயர் கோயில் தெரு முதல் கல்யாணசுந்தரம் தெரு வரை மழை நீர் கால்வாய் அமைக்க ரூ.24.50 லட்சம் நிதி ஒதுக்கீட்டில், மேற்படி இரு பணிகளுக்கும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் ந.க.எண். 1371/2018/பேரூ.1/நாள் 10.08.2018ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, இணையதளம் மற்றும் நாளேடுகளில் 16.08.2018 நாளிட்ட ஒப்பந்தப்புள்ளி தொடர்பான அறிவிக்கை விளம்பரப்படுத்தப்பட்டு, 31.08.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 31.08.2018 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பேரூராட்சி பொது நிதியின் மூலம் எடுக்கப்பட்ட இரு பணிகள் துவங்கி முடிக்கப்பட்ட பின்னர்தான் மூலதன நிதியின் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட பணிகள் உரிய விதிமுறைகளை கடைபிடிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன எனவும் தனது விளக்க அறிக்கையில் காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

08.08.2019 நாளிட்ட இம்முறைமன்ற நடுவர் அழைப்பாணையின்படி 18.10.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் சிட்லபாக்கம் பேரூராட்சி பொது நிதியில் ரூ.20.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ராமர் தெருவில் மேல் மூடியுடன் கூடிய மழை நீர்வடிகால் பணிக்கு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் ந.க.எண். 1371/2018/பேரூ.1/நாள். 10.08.2018ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மேற்படி பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி செயற்பொறியாளர் மூலம் 21.08.2018 அன்று தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டும், மேற்படி பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.241/2018/நாள்.16.08.2018ல் கோரப்பட்டு, 31.08.2018ல் பெறப்பட்ட இரு பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்பட்டு 31.08.2018ல் பணி ஆணைகள் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், இராமர் தெருவில் இருந்து சேதுநாராயணன் தெரு வரை மேல் மூடியுடன் கூடிய மழை நீர் வடிகால் பணி 138 மீட்டர் நீளத்திற்கு ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் மூலதன மானிய திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதாகவும், மேற்கண்ட இரு பணிகளும் வெவ்வேறு திட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு எனவும் தெரிவித்துள்ளார். மேலும், இரு பணிகளும் ஒரே மாதிரியான பணி என்றாலும், வெவ்வேறு பகுதிகளில் செய்யப்பட்ட பணி எனவும், இதனை ஒரே பணி என முறையீட்டு மனுதாரர் தவறாக புரிந்துள்ளார் எனவும் தனது வாக்குமூலத்தில் உதவி செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

18.10.2019 நாளிட்ட காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூல நகலினை முறையீட்டு மனுதாரருக்கு 23.12.2019 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் அனுப்பி வைக்கப்பட்டு அதன் மீதான ஆட்சேபணை/விளக்கத்தினை சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டதின் பேரில், 11.01.2020 நாளிட்ட கடிதம் மூலம் முறையீட்டு மனுதாரர் தனது ஆட்சேபணை மற்றும் விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

02.03.2020 நாளிட்ட காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடிதத்தில் மேற்படி முறையீட்டு மனுதாரரின் 11.01.2020 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள ஆட்சேபணை/விளக்கம் தொடர்பாக 31.08.2018 சனிக்கிழமை என தெரிவிக்கப்பட்டமைக்கு அன்றைய தினம் வெள்ளிக்கிழமை எனவும், ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பு நோக்கு படிவம் தயாரிக்க அனுமதிக்கப்பட்ட நாட்கள் நான்கு குறிப்பிடப்படவில்லை தவிர, குறைந்த நாட்களில் ஒப்புநோக்கு படிவம் தயாரிப்பதில் எவ்வித முறைகேடும் இல்லை எனவும், மேற்கொள்ளப்பட்ட பணிகள் யாவும் உயர் அலுவலர்களின் அறிவுரையின்படியும் விதிமுறைகளின்படியும் மேற்கொள்ளப்பட்டதாகவும், சிட்லபாக்கம் பேரூராட்சியில் பொதுப்பணித்துறை மூலம் ரூ.12.50 கோடி மற்றும் பேரூராட்சியின் மூலம் ரூ.5.00கோடி மதிப்பிலான பணிகளில் சுமார் 1,580 மீட்டர் அளவிற்கு மூடியுடன் கூடிய மழை நீர் வடிகால் கட்டப்பட்டுள்ளதாகவும், பெருமழை தொடர்பாக Red Alert விடப்பட்டதின் காரணமாக பொதுமக்களின் நலன் கருதி பணிகள் துவங்கப்பட்டு நவம்பர் 2019க்குள் பணிகள் முடிக்கப்பட்டதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம், சிட்லபாக்கம் பேரூராட்சியில் உள்ள மழை நீர் வடிகால்களில் மேற்படி பேரூராட்சிப் பகுதியில் இயங்கும் உணவகங்களில் இருந்து வெளியேறும் கழிவு நீர் சென்று அருகில் உள்ள ஏரியில் கலப்பதால் ஏரி நீர் மாசடைவதாகவும், சிட்லபாக்கம் பேரூராட்சியில் உள்ள தெருக்களில் ஆக்கிரமிப்புகள் அதிகம் உள்ளதாகவும், இவற்றினை அகற்றவும், மற்றும் மழை நீர் வடிகால்களில் கழிவு நீர் கலக்காமல் நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ள முறையீட்டு மனுதாரரின் 10.06.2019 நாளிட்ட மனு காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு 18.06.2019 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் அனுப்பி வைக்கப்பட்டு இது குறித்து உரிய கள ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது. மேற்படி மனு மீது காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது 27.08.2019 நாளிட்ட அறிக்கையில் மேற்படி பொருள் தொடர்பாக காஞ்சிபுரம் மாவட்டம், சிட்லபாக்கம் பேரூராட்சியில் 02.07.2019 அன்று ஆய்வு மேற்கொண்டதாகவும், அது சமயம் சிட்லபாக்கம் பேரூராட்சி பிரசிடென்ட் பல்லவன் தெருவில் உள்ள உணவக கழிவுகள் யாவும் அவர்களது சொந்த இடத்தில் கழிவு நீர் தொட்டி அமைத்து சேகரம் செய்யப்படுவதாகவும், உணவுக் கழிவுகள் தனியே தேங்கிய நீர் மட்டுமே மழை நீர் வடிகாலில் விடப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் பாலாஜி அவென்யூ கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சேகரம் செய்யும் கழிவு நீர் சுத்திகரிப்பு செய்வது தொடர்பாக மனுதாரருடன் 29.03.2019ல் செயல் அலுவலரால் நேரடியாக கள ஆய்வு செய்து மேற்படி நிலையம் இயங்குவது குறித்து மனுதாரருக்கு விளக்கப்பட்டதாகவும், மேற்படி சிட்லபாக்கம் பேரூராட்சியில் பொதுப்பணித்துறையின் மூலம் ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் மேல் மூடியுடன் கூடிய மழை நீர் வடிகால் அமைக்கும் பணியானது அக்கரை வழியாக மழை நீரை கொண்டு சென்று செம்பாக்கம் ஏரியில் சேர்ப்பதற்கான பணி தற்போது நடைபெற்று வருவதால் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய இயக்கம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிட்லபாக்கம் பேரூராட்சி தெருக்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் தொடர்பான ஆய்வறிக்கையில் மேற்படி பேரூராட்சி பகுதிக்குட்பட்ட அண்ணா தெரு, காந்தி தெரு, நேரு தெரு, குளக்கரைத் தெரு ஆகியவை அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகள் அல்ல எனவும், மேற்படி தெருக்கள் பூர்வீக குடியிருப்புகள் எனவும் பட்டா நிலத்தில் நிலத்தின் உரிமையாளர்களால் விடப்பட்ட சாலை என விவரங்களில் சாலைகள் பேரூராட்சிக்கு தெரியவந்ததாகவும், அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவாக இருந்திருந்தால் சாலைகள் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கும் எனவும், பிரசிடென்ட் பல்லவன் தெரு ஒரு பகுதி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் வரைபடமாகவும், அதில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டு சாலை அகலமாக உள்ளதாகவும், மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டு சாலை அகலப்படுத்தப்படும் மனைப்பிரிவு அங்கீகரிக்கும்போது சாலை தானமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு சாலை அகலப்படுத்தப்படும் எனவும், காந்தி தெரு, நேரு தெரு, குளக்கரைத் தெரு ஆகிய அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் உள்ளதால் ஆக்கிரமிப்புகள் கண்டறிய இயலவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு தொடர்பாக சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர், சிட்லபாக்கம் பேரூராட்சி செயல்

அறிக்கை மற்றும் காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், உதவி செயற்பொறியாளர் ஆய்வாளர்களின் வாக்குமூலம், காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வறிக்கை மற்றும் வாக்குமூலங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டன.

பேரூராட்சி பொது நிதியில் மேற்கொள்ளப்பட்ட இரு பணிகளுக்கு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் நிர்வாக அனுமதி 10.08.2018ல் பெறப்பட்டு, இப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி செயல் அலுவலரின் 16.08.2018 நாளிட்ட அறிவிக்கை மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை 31.08.2018ல் பரிசீலித்து, 31.08.2018ல் பணி ஆணைகள் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதும், காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வறிக்கை மற்றும் வாக்குமூலங்களில் இருந்து உறுதியாகிறது.

மூலதன மானிய திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட ஐந்து பணிகளும், பேரூராட்சிகளின் இயக்குநரின் நிர்வாக அனுமதி நிபந்தனையில் தெரிவித்துள்ளவாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெறப்பட்டு குறுகிய கால ஒப்பந்தங்கள் கோரி பணிகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, மேற்கண்ட ஐந்து பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் 17.10.2018ல் பெறப்பட்டு, ஒப்பு நோக்கு குழுவினர் மூலம் சரிபார்க்கப்பட்டு தகுதியுள்ள ஒப்பந்ததாரருக்கு 22.10.2018ல் பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது அறிக்கை/ஆவணங்களின் வாயிலாக தெரிகிறது. மேலும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்பு நோக்கு படிவம் தயாரிக்க முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள 15 நாட்கள் என்பது அதிகபட்ச நாட்கள் எனவும், அமைக்கப்பட்ட தொழில் நுட்பக் குழுவின் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் சரிபார்க்கப்பட்டு தொழில் நுட்ப ரீதியாக அதே நாளில் சரிபார்ப்பதில் எவ்வித நடைமுறை மீறலும் இல்லை எனவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது 02.03.2020 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எனவே சிட்லபாக்கம் பேரூராட்சி பொது நிதியின் இருந்து மேற்கொள்ளப்பட்ட இரு பணிகளுக்கும் 31.08.2018ல் பணி ஆணை வழங்கப்பட்டும், பேரூராட்சிகளின் இயக்குநரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட மூலதன மானிய நிதி திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 5 பணிகளுக்கும் 22.10.2018ல் பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது உறுதியாகிறது. மேற்படி இரு திட்ட பணிகளுக்கும் வெவ்வேறு கால கட்டங்களில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும், சுமார் இரண்டு மாத கால இடைவெளியில் பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது அறிக்கைகளின் வாயிலாக உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே மூலதன மானிய நிதி திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ராகவா தெருவில் 138 மீட்டர் நீளம் மூடியுடன் கூடிய மழை நீர்வடிகால் பணியும், அதே தெருவில் 30 மீட்டர் நீளத்தில் மேல் மூடியுடன் கூடிய மழை நீர் வடிகால் பணியும் வெவ்வேறு திட்டங்களில் வெவ்வேறு கால கட்டத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும், பணி ஆணைகள் வழங்கப்பட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதால் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளவாறு போலி ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் முன்னரே ஒப்பந்ததாரர் இறுதி செய்யப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ள குற்றச்சாட்டு போதிய ஆதாரங்களுடன் நிரூபணமாகவில்லை.

மேலும் சிட்லபாக்கம் பேரூராட்சியில் நரசிம்ம பல்லவன் தெருவில் உள்ள உணவகங்களில் இருந்து வெளியேறும் கழிவு நீர், கழிவு நீரில் உள்ள குப்பைகள் இன்றி தெளிந்த நீர் மட்டுமே மழை நீர் வடிகால் மூலம் வெளியேற்றப்பட்டு, பம்மல் நல்லம்பு பகுதியில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிக்கப்படுவதாகவும், மேற்படி சுத்திகரிப்பு நிலையம் உள்ள பகுதியில் பொதுப்பணித்துறையின் மூலம் மேம்படுத்தும் பணிகள் தொடர்பாக கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கையின் வாயிலாக உறுதியாகிறது. மேலும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள தெருக்கள் முறையாக மனைப்பிரிவு அங்கீகாரம் அளிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் உள்ள தெருக்கள் அல்ல எனவும் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் உள்ள தெருக்கள் எனவும் இதன் பொருட்டு தெருக்களின் ஆக்கிரமிப்பு விவரம் பெற வாய்ப்பு ஏதுமில்லை எனவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாப்பாஜி நகெனப்பு பகுதியில் தற்காலிகமாக செயல்பாடு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை, மேற்படி பகுதியில் மேற்கொள்ளப்படும் பணி முடிவடைந்தவுடன் மீண்டும் செயல்படச் செய்து முறையாக குடிநீர் சுத்திகரிப்பு செய்வதற்கு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

எனவே இந்நேர்வில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரது ஆய்வறிக்கையின் அடிப்படையில் இம்முறையீட்டு மனு மீதான தொடர் நடவடிக்கை கைவிடுவதென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. மேலும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்புகளுக்குட்பட்டுள்ள தெருக்கள் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் அமைந்திருப்பினும் மேற்படி மனைப்பிரிவுகள் முறையாக அங்கீகாரம் பெறப்படாமல் ஏற்படுத்தப்பட்டுள்ளது குறித்தும் அப்பகுதிகளில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு முறையான கட்டிடங்கள் குறித்தும், ஆக்கிரமிப்புகள் குறித்தும் முறையாக கள ஆய்வு செய்து சட்ட விதிகளின்படி நடவடிக்கைகள் உறுதி செய்யப்படவேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 07 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

பெறுநர்

1.திரு. சுனில் ஜெரோம்,
எண்.7, 2–வது பிரதான சாலை,
எஸ்.பி.ஐ. காலனி,
சிட்லபாக்கம்,
சென்னை - 64.

2.செயல் அலுவலர்
சிட்லபாக்கம் பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
காஞ்சிபுரம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர்(ஊராட்சிகள்)